வாரம் - 18 ஊக்கப் பாடல் எண் - 18

# மொழிவாழ்த்து

காதொளிரும் குண்டலமும்
கைக்கு வளையாபதியும்
கருணை மார்பின் மீது ஒளிர்
சிந்தாமணியும் மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார்
இன்பப் போதொளிரும் திருவடியும்
பொன்முடி சூளாமணியும்
பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த்
திருக்குறளைத் தாங்கு
தமிழ் நீடு வாழ்க.

தமிழன்னை உடலில் அணிகலான உள்ள ஒவ்வொரு இலக்கியச் செல்வங்களையும் சுட்டிக் காட்டி அத்தமிழ் இலக்கியங்களின் பொதுவான உட்கருத்தை இலக்கிய நயத்தை, பாடல்களின் செறிவை சுட்டிக்காட்டி மாணவர்களை ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.

# சூழலில் உள்ள சொற்கள் அறிமுகம்

மாணவர்களின் பல்வேறு சூழல்களை
ஆசிரியர் வரிசைப்படுத்தவும்
(எடுத்துக்காட்டு)

1. வீட்டுச் சூழல்
2. பள்ளிச் சூழல்
3. பேருந்து நிலையச் சூழல்
4. தொடர்வண்டி நிலையச் சூழல்
5, அனைத்து வணிகக் கடைச் சூழல்

(தனித்தனியாக ஒவ்வொரு கடையையும்
ஒரு தனிச் சூழலாகக்
கருதியும் வரிசைப்படுத்தலாம்.)

ஒவ்வாரு சூழலிலும் மாணவர்கள்
பேசுகிற எளிமையான தொடர்களை
வரிசைப் படுத்திக் கொண்டு
அதனை அறிமுகப்படுத்தலாம்.

உரையாடலாக நடித்துக்காட்டி உணரச் செய்யலாம்.

**சூழலிலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்வதோடு அந்தச் சூழலில் பயனாகுகிற தொடர்களையும் உணரவைக்க வேண்டும்**

## எடுத்துக் காட்டு

### வகுப்பறைச் சூழல் வகுப்பறை (சொற்கள் )

குறிப்பேடு , புத்தகம் , மேசை , நாற்காலி ,
இருக்கை , பை , உணவுப்பை , பெட்டி ,
நிலைப்பேழை , மின்விசிறி, , குழல்விளக்கு ,
சாளரம் , குவளை , தண்ணீர் , எழுதுகோல் ,
அழிப்பான் , கரிக்கோல் , தூவல் , மை ,
கரும்பலகை , துடைப்பான் , மிதியடி , மூடணி ,
கச்சை , கைத்துணி , ..........................

வினாக்கேட்டடல்

இது என்ன ? இது குறிப்பேடு.
இது என்ன ? இது புத்தகம்.
இது என்ன ? இது இருக்கை................................
அது என்ன ? அது கரும்பலகை,
அது என்ன ? அது மின்விசிறி,
அது என்ன ? அது குழல் விளக்கு...................................

வகுப்பறையில் உள்ள சொற்களை அறிமுகப் படுத்துவதும் , வினாக் கேட்டு பேசுவதற்கு அறிமுகப்படுததுவதும் இயல்பாக அமைய வேண்டும்

# வாரம் - 18 பாட அறிமுகம்

இது வரை கற்றுக் கொண்ட 36 எழுத்துகளையும்
மீள்பார்வை செய்தல்

கற்றுக் கொண்ட எழுத்துகளைச் சொல்லுதல்
கற்றுக் கொண்ட எழுத்துகளை எழுதிக் காட்டுதல்
கற்ற எழுத்துகளைச் செய்தித்தாளில் வட்டமிடுதல்

கற்றுக் கொண்ட 36 எழுத்துகளையும்
இரண்டு இரண்டு எழுத்துகளாக
ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக்காட்டி
மாணவர்களை ஒலிக்கச் செய்தல்.

ஒரு மாணவர் இரண்டு எழுத்துகளைக்
கரும்பலகையில் எழுத
அடுத்த மாணவர் அந்த இரண்டு
எழுத்துகளை இணைத்துப் படித்தல்

36 எழுத்துகளையும் அட்டையில்
தனித்தனியாக எழுதி வைத்துக் கொண்டு
அட்டைக் குவியலை மேசையில் வைத்து
ஒரு மாணவரை இரண்டு அட்டைகளை
எடுக்கவும் அடுத்த மாணவர்
இரண்டு எழுத்துகளை இணைத்துப்
படிக்கவும் - விளையாட்டு வழியில்
எழுத்துகளை மீள்பார்வை செய்யலாம்

# வாரம் - 18

## மாணவர் செயற்பாடு எண் - 1

மாணவர் பெயர் ...................................... நிலை............ நாள்................

( கற்றுக்கொண்ட அனைத்து (36) எழுத்துகளையும் கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 18

## வீட்டு வேலை

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட அனைத்து (36) எழுத்துகளையும் கீழே எழுதவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |